**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 08 பெப்ரவரி 2018

Good Food, Good Life

# இலங்கையில் இளம் பருவத்தினர் அருந்தி மகிழ்வதற்காக புத்துணர்ச்சியூட்டும் புதிய சுவையுடன் *Nestomalt Gold* அறிமுகமாகியுள்ளது

இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த பான வகை வர்த்தகநாமமான நெஸ்டமோல்ற்று தற்போது மற்றுமொரு சுவைமிகு உடனடி பானமாக (Ready-To-Drink) *Nestomalt Gold* எனும் மோல்ற்று பான உற்பத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது. பாலேடு நிரம்பியதுடன், நொடிப்பொழுதில் புத்துணர்ச்சியை வழங்கும் *Nestomalt Gold* அபூர்வமான சுவை ரசனையை நாடுகின்ற இளம் பிராயத்தினருக்கு உகந்த ஒரு உற்பத்தியாக காணப்படுகின்றது.

இப்புதிய உற்பத்தியானது தனித்துவமான சுவை, கவர்ச்சிகரமான நவீன பொதியிடல் மற்றும் முக்கோண வடிவ பக்கட் ஆகியவற்றுடன் தற்போது கிடைக்கப்பெறுகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் கூறுகையில், *"உலகில் எந்தவொரு உணவு உற்பத்தி நிறுவனத்தைப் பொறுத்த வரையிலும் மிகவும் பாரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலையமைப்பை நெஸ்லே நிறுவனம் கொண்டுள்ளமை உலகறிந்த ஒரு விடயமாகும். எமது குழுவினர் நெஸ்டமோல்ற்றின் அபிமான மோல்ற்று சுவை மற்றும் பாற்சுவையினை மேம்படுத்தி, அபூர்வமான புதிய சுவை கொண்ட மாற்றுருவொன்றை உருவாக்கியுள்ளனர். எமது உற்பத்தியும் அதனைப் பிரதிபலிப்பதுடன், நாட்டில் இளம் பருவத்தினரின் இதயங்களை Nestomalt Gold கொள்ளைகொள்ளும் என நிச்சயமாக நம்புகின்றேன். 'அருந்திப் பாருங்கள், நீங்கள் அதை நேசிப்பீர்கள்'! ('Have it, you'll love it'!) என்ற ஊக்குவிப்புப் பிரச்சாரமும் அதனையே பிரதிபலிக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *"நெஸ்டமோல்ற்று அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கை குடும்பங்கள் மத்தியில் பல தலைமுறைகளுக்கு ஊட்டச்சத்தை வழங்கி வந்துள்ளது. மிகவும் நேசிக்கப்படுகின்ற வர்த்தகநாமத்தின் பாரம்பரியத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள அதன் புத்தாக்கமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட உற்பத்திகள் பல்வேறுபட்ட உணவு உண்ணுகின்ற சந்தர்ப்பங்களில் பல வடிவங்களிலும், சுவைகளிலும் நெஸ்டமோல்ற்றினை அருந்தி மகிழ நுகர்வோருக்கு இடமளிக்கின்றன. நெஸ்டமோல்ற்று உற்பத்தி வரிசை தற்போது மூன்று உற்பத்தி வடிவங்களைக் கொண்டுள்ளது. அனைவரது அபிமானத்தையும் பெற்றுள்ள நெஸ்டமோல்ற்று பால் மா மட்டுமல்லாது ஓட்ஸ் நலச்செழுமையுடன் அண்மையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட* Nestomalt Plus *மற்றும் தற்போது அறிமுகமாகின்ற உடனடி பானமான* Nestomalt Gold *ஆகியனவே அவையாகும். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிக்கவேண்டும் என்ற நெஸ்லே நிறுவனத்தின் நோக்கத்தை எமது நெஸ்டமோல்ற்று உற்பத்தி வரிசை வலுவாக பிரதிபலிக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

நெஸ்டமோல்ற்று கடந்த காலங்களில் இளைஞர்கள் மற்றும் முதியோர் என அனைவருக்கும் ஊட்டச்சத்தை வழங்கி வந்துள்ளது. பிரத்தியேகமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெஸ்டமோல்ற்று, மோல்ற்று மற்றும் பால் ஆகியவற்றின் நலச்செழுமையுடன் தனது நுகர்வோரின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ந்தும் மேம்படுத்தி வருகின்றது. *Nestomalt Gold* உற்பத்தியை வெகுவிரைவில் நாடெங்கிலுமுள்ள விற்பனை நிலையங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.